சுருக்கம்

வாகனம் – மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை – பழைய அம்பாசிடர் வாகனத்தினை கழிவு நீக்கம் செய்து புதிய அம்பாசிடர் வாகனம் அரசின் முன் அனுமதி பெறாமல் வாங்கப்பட்டது – பின்னேற்பு அளித்தல் – ஆணையிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி–2) துறை

அரசு ஆணை (ப) எண்.187

நாள்: 19.04.2010
சித்திரை: 6
திருவள்ளுவர் ஆண்டு 2041
படிக்கப்பட்டவை:

1. மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை, நேர்முக கடித எண்.டி1/1043/2004, நாள் 27.03.2007 மற்றும் 26.11.2009.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை –15 கடிதம் எண்.25904/2007/ எஸ்.ஜி.எஸ்.ஒய்.I-1, நாள் 17.04.2007.

ஆணை:

முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் பயன்பாட்டிற்காக 1988ல் வாங்கப்பட்ட TAU 8001 எண்ணிட்ட அம்பாசிடர் வாகனம் உபயோகப்படுத்தப்பட்டு வந்தது என்றும், இந்த வாகனம் முறைப்படி கழிவு நீக்கம் சான்று பெற்று ஏலம் விடப்பட்டது என்றும், இதன் அடிப்படையில் அவசரம் மற்றும் அவசியம் கருதி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் ஆட்சி மன்றக் குழு அங்கீகாரம் பெற்று ரூ.4,12,184/– மதிப்பில் புதிய அம்பாசிடர் கார் வாங்கப்பட்டது என்றும், இவ்வாகனமானது மத்திய அரசின் DGS & D விலை விகிதத்தில் இம்முகமையின் ஊதியம் மற்றும் படிகளுக்கான மொத்த செலவினத்தில் 30 விழுக்காடு அளவிலான சில்லரை செலவின ஒதுக்கீட்டிற்குள்ளாக செலவு செய்து வாங்கப்பட்டுள்ளது என்றும், அரசின் முன் அனுமதியை எதிர்பார்த்து, ஆட்சிமன்ற குழுவின் ஒப்புதலுடன் இச்செயல் மேற்கொள்ளப்பட்டதாகவும் காலத்தின் கட்டாயத்தினைக் கருதி இச்செயல் அவசர அவசியத்தை முன்னிட்டு மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து அரசின் முன் அனுமதியை எதிர்பார்த்து புதிய வாகனம் வாங்கியமைக்கு பின்னேற்பு வழங்கிடுமாறு கோரியுள்ளார்.

2. இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், கழிவு நீக்கம் செய்யப்பட்ட சீருந்துக்குப் பதிலாக புதிய சீருந்து மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்காக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் நிர்வாக நிதியில் இருந்து அரசின் அனுமதியை எதிர்நோக்கி மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் வாங்கிய செயலுக்கு பின்னேற்பு ஆணை வழங்கி உத்தரவிடுமாறு அரசினைக் கோரியுள்ளார்.

(த.பி.பா.)

3. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் ஆகியோரது கருத்துக்களை பரிசீலித்த அரசு, கழிவு நீக்கம் செய்யப்பட்ட மோட்டார் வாகனம் (அம்பாசிடர் கார்) எண். TAU 8001–க்குப் பதிலாக புதிய மோட்டார் வாகனம் (அம்பாசிடர் கார்) அரசின் முன் அனுமதி பெறாமல் வாங்கிய மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை அவர்களின் செயலுக்கு பின்னேற்பு அளித்து ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர்,
சென்னை – 15.
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
மதுரை.
திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை.
நகல்
நிதி (ஊ.வ.) துறை, சென்னை – 9.
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.